**ஜனவரி – 10**

# TNPSC துளிகள்

- உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியை நியமிப்பதற்கு பாகிஸ்தான் அரசு முன் வந்துள்ளது.
  - லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் என்பவரை உச்ச நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக நியமிப்பதற்கு உயர்மட்ட அதிகாரக் குழு ஒப்புதல் அளித்ததை அடுத்து இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டது.
- கேரளாவைச் சேர்ந்த ஸ்ருதி சித்தாரா என்பவர் 2021 ஆம் ஆண்டிற்கான உலகத் திரு நங்கை அழகியாக மகுடம் சூட்டப்பட்டார்.
  - 25 வயதான ஸ்ருதி சித்தாரா கேரளாவைச் சேர்ந்தவர் ஆவார்.

# தமிழ்நாடு செய்திகள்

## 3வது தேசிய நீர் மேலாண்மை விருதுகள் 2020





- 2020 ஆம் ஆண்டிற்கான 3வது தேசிய நீர் மேலாண்மை விருதுகளை வென்ற இந்திய மாநிலங்களின் பெயர்களை மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்தார்.
- இதில் சிறந்த மாநிலம் என்ற பிரிவில் தமிழ்நாடு மூன்றாம் பரிசைப் பெற்றது.
- உத்தரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகியவை முறையே முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளை பெற்றன.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள வெள்ளப்புத்தூர் என்ற ஊராட்சி, 'சிறந்த கிராமப் பஞ்சாயத்து - தென் மண்டலம்' என்ற பிரிவில் இரண்டாம் பரிசினைப் பெற்றது.
- மதுரை மாநகராட்சியானது, 'சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி' அமைப்பு என்ற பிரிவில் மூன்றாம் பரிசை வென்றது.
- 'சிறந்தப் பள்ளி' என்ற பிரிவில், காவேரிப் பட்டினத்தின் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதலிடத்தினைப் பிடித்தது.

## தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட மசோதாக்கள்

- கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்களின் பதவிக் காலத்தை ஐந்திலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைப்பதற்கான ஒரு மசோதாவினை மாநில அரசு சட்டசபையில் அறிமுகப் படுத்தியது.
- புதிய மாநகராட்சிக் கழகங்களை அமைப்பதற்கான ஒரு மசோதாவையும் மாநில அரசு அறிமுகப் படுத்தியுள்ளது.

- கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர், தாம்பரம் மற்றும் கும்பகோணம் போன்ற மாநகராட்சிகளை உருவாக்குவதற்கான ஒரு மசோதாவினை உள்ளாட்சித் துறை அமைச்சர் K.N.நேரு தாக்கல் செய்தார்.




# தேசியச் செய்திகள்

## கிராமங்களின் கலாச்சாரம் பற்றிய ஆய்வு





- அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட CSC SPV (Common Service Centres Special Purpose Vehicle - பொதுச் சேவை மையங்களின் சிறப்பு நோக்க வாகனம்) ஆனது கலாச்சார அமைச்சகத்துடன் இணைந்து, இந்தியக் கிராமங்களின் மீதான முதல் கலாச்சார ஆய்வை மேற்கொள்ள உள்ளது.
- இது ஒரு கைபேசி செயலி மூலம் மேற்கொள்ளப்படும்.
- இந்த ஆய்விற்கு 'மேரா காவ்ன், மேரி தரோஹர்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- குடிமக்கள் தங்கள் கிராமம், தொகுதி அல்லது மாவட்டத்தைத் தனித்துவமிக்க

ஒன்றாக மாற்றுவதற்கு எவை எவை பங்காற்றும் என்பதைக் குறித்துப் பகிர்ந்து கொள்ளச் செய்வதன் மூலம் கிராம அளவில் உள்ள கலாச்சார அடையாளங்களை இது ஆவணப் படுத்தும்.

## ஸ்டார்ட்அப் இந்தியா புத்தாக்க வாரம்

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை மற்றும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து 'ஸ்டார்ட்அப் இந்தியா புத்தாக்க வாரம்' என்ற பெயரில் ஒரு வார அளவிலான கொண்டாட்டங்களை காணொலி வாயிலாக நடத்துவதற்கு முடிவு செய்துள்ளன.
- இது இந்தியா முழுவதும் தொழில்முனைவின் பரவலையும் ஈடுபாடுகளையும் காட்சிப் படுத்தும்.
- இந்தக் காணொலி நிகழ்வானது 2022 ஆம் ஆண்டு ஜனவரி 10 முதல் ஜனவரி 16 வரை நடத்தப்பட உள்ளது.
- இந்தியா சுதந்திரம் அடைந்ததின் 75வது ஆண்டிற்கான கொண்டாட்டமான 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' என்ற ஒரு நிகழ்வினை நினைவு கூறும் வகையிலும் இந்த நிகழ்ச்சியானது நடத்தப் படுகிறது.




## செலவு வரம்பு - தேர்தல் ஆணையம்


| For Parliamentary Constituencies (PCs) | |
|---|---|
| Earlier expenditure limit (2014) | Enhanced expenditure limit now |
| Rs. 70 Lakh | Rs. 95 Lakh |
| Rs. 54 Lakh | Rs. 75 Lakh |

| For Assembly Constituencies (ACs) | |
|---|---|
| Earlier expenditure limit (2014) | Enhanced expenditure limit now |
| Rs. 28 Lakh | Rs. 40 Lakh |
| Rs. 20 Lakh | Rs. 28 Lakh |

- மக்களவைத் தேர்தலுக்கான தேர்தல் செலவு வரம்பினை ₹70 லட்சத்தில் இருந்து ₹95 லட்சமாக தேர்தல் ஆணையம் உயர்த்தியுள்ளது.
- மாநிலச் சட்டசபைத் தேர்தலுக்கான செலவு வரம்பு ஆனது ₹28 லட்சத்தில் இருந்து ₹40 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- செலவினங்களின் மீதான பணவீக்கக் குறியீட்டின் அதிகரிப்பு மற்றும் வாக்காளர்கள் பட்டியலில் மக்கள் தொகையின் எண்ணிக்கை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக இந்தச் செலவினங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் தற்போது நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இந்தப் புதிய செலவின வரம்புகள் பொருந்தும்.

## நீர்வள வரைபடம்





- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் 19வது கூட்டமானது, மத்தியச் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமையில் நடைபெற்றது.
- இந்தச் சந்திப்பின் போது, மத்திய அமைச்சர் நீர்வள வரைபடத்தினை வெளியிட்டார்.
- இந்த வரைபடமானது, இந்தியாவின் புலிகள் வாழும் பகுதிகளில் உள்ள அனைத்து நீர் நிலைகளையும் வரைபடமிடுகிறது.
- இந்த நீர்வள வரைபடத்தில், நிலப்பரப்பு வாரியான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இதில் சிவாலிக் மலைகள் மற்றும் கங்கைச் சமவெளி நிலப்பரப்பு, மத்திய இந்திய நிலப்பரப்பு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள், மேற்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியவற்றின் நிலப்பரப்பு, வடகிழக்கு மலைகள் மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுச் சமவெளிகள் மற்றும் சுந்தரவனக் காடுகள் ஆகியவை அடங்கும்.

## மகாகாளி ஆற்றுப் பாலம்

- இந்தியாவையும் நேபாளத்தையும் இணைக்கும் வகையிலான ஒரு புதிய ஆற்றுப் பாலத்தினைக் கட்டமைக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மகாகாளி ஆற்றின் மீது கட்டப்பட உள்ள இந்தப் பாலம் தொடர்பான ஒரு புரிந்துணர்வு

ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட உள்ளன.

- இது உத்தரகாண்டில் உள்ள தார்ச்சுலா என்ற பகுதியை நேபாளத்தில் உள்ள தார்ச்சுலா என்ற பகுதியுடன் இணைக்கும்.




## நடமாடும் தேன் பதப்படுத்துதல் வாகனம்




- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது காஜியாபாத்தில் உள்ள சிரோரா கிராமத்தில் நாட்டிலேயே முதல் முறையாக நடமாடும் தேன் பதப்படுத்துதல் வாகனத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த நடமாடும் வாகனமானது, அரியானாவின் பஞ்சோகெஹ்ராவில் உள்ள காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையத்தின் பல்துறைப் பயிற்சி மையத்தில்

வடிவமைக்கப் பட்டுள்ளது.

- இந்த நடமாடும் தேன் பதப்படுத்துதல் அலகில் 8 மணி நேரத்தில் 300 கிலோ தேனைப் பதப்படுத்த முடியும்.
- இந்த வாகனத்தில் தேனின் தரத்தை உடனடியாகப் பரிசோதித்து ஆராயும் வகையிலான ஒரு சோதனைக் கூடமும் அமைக்கப் பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பொதுச் செயலாளர்

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் புதிய பொதுச் செயலாளராக சீனாவின் மூத்த அரசு முறை அதிகாரி சாங் மிங் என்பவர் பொறுப்பேற்றுள்ளார்.
- அவர் சமீப காலம் வரையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சீனத் தூதராக இருந்தார்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது எட்டு உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கியது.
- அவை இந்தியா, கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ் குடியரசு, பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகும்.
- 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற அஸ்தானா உச்சி மாநாட்டில் இந்தியா ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இணைந்தது.



# மாநிலச் செய்திகள்

## வாழ்நாள் அமைச்சரவை உறுப்பினர் அந்தஸ்து



- முன்னாள் முதல்வர் பிரதாப்சிங் ரானேவுக்கு நிரந்தர அமைச்சரவை உறுப்பினர் என்ற ஒரு தகுதிநிலையினை வழங்குவதற்கு அம்மாநில அமைச்சரவை முடிவு செய்து உள்ளதாக கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் கூறினார்.
- ரானே போரியம் என்ற ஒரு சட்டமன்றத் தொகுதிக்காக காங்கிரஸ் கட்சியின் சார்பில் தற்போது சட்டமன்ற உறுப்பினராக உள்ளார்.
- ரானே தனது தற்போதைய பதவிக் காலத்தின் போதே கோவா சட்டமன்றத்தில் தனது 50 ஆண்டு என்ற ஒரு பதவிக் காலத்தினை நிறைவு செய்திருப்பதால் அவருக்கு இந்த மரியாதை வழங்க முடிவு செய்யப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 78வது SKOCH உச்சி மாநாடு




- டெல்லியில் உள்ள தடய அறிவியல் ஆய்வகம் - தடயவியல் சேவை அமைப்பானது 2021 ஆம் ஆண்டிற்கான SKOCH விருதினை (வெள்ளி) வென்றுள்ளது.
- குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் வன்முறைகள் போன்றவற்றை எதிர்த்துப் போராடியதற்காக ஆளுகைப் பிரிவில் இந்த அமைப்பானது அந்த விருதைப் பெற்றது.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி 06 அன்று நடைபெற்ற 78வது SKOCH உச்சி மாநாட்டின் போது இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இந்த உச்சி மாநாடானது, "ஆளுகை நிலை" என்ற கருத்துருவுடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த SKOCH விருது இந்தியாவின் ஒரு உயரிய குடிமை விருது ஆகும்.
- சிறந்த இந்தியாவைக் கட்டியெழுப்புவதற்காக உழைக்கும் மக்கள், திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை அங்கீகரிக்கச் செய்வதற்காக வேண்டி ஒரு தன்னார்வ அமைப்பால் இது வழங்கப் படுகின்றது.
- புனே சர்வதேச மையத்தின் முன்னணி உறுப்பினர்களால் எழுதப்பட்ட 'Rising to the China Challenge: Winning Through Strategic Patience and Flexible Policies' என்ற புத்தகத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்கான SKOCH இலக்கிய விருதானது வழங்கப் பட்டது.
- இந்தப் புத்தகமானது ரூபா பப்ளிகேஷன்ஸ் இந்தியா லிமிடெட் பதிப்பகத்தினால் 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- சீனாவின் தூண்டுதலால் 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்வான் பள்ளத்தாக்கு

மோதலை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புத்தகமானது எழுதப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## எம்டி ஆரிப் கான்



- இந்திய விளையாட்டு அமைச்சகத்தின் ஒலிம்பிக் திட்டப் பிரிவானது ஆல்பைன் பனிச் சறுக்கு விளையாட்டு வீரர் எம்டி ஆரிப் கானை, பிப்ரவரி மாதத்தில் சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் வரையில், ஒலிம்பிக் மைதான இலக்கு என்ற திட்டத்தின் ஒரு முக்கியக் குழுவில் சேர்ப்பதற்கு தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- இரண்டு வெவ்வேறு காலத்தின் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க நேரடி ஒதுக்கீடுகளைப் பெற்ற முதல் இந்தியர் என்ற ஒரு தனிச்சிறப்பினை இந்தச் சாதனை கானுக்குப் பெற்று தந்தது.
- 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வேண்டி இந்தியாவில் இருந்து தேர்வான முதல் தடகள வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

## பல்பரிமாண சாகச விளையாட்டுப் பயணம்




- பிரான்ஸ் நாட்டில் உள்ள தேசிய மலையேறுதல் மற்றும் அது சார்ந்த விளையாட்டு

நிறுவனம் நடத்திய இந்தியாவின் முதல் பல்பரிமாண சாகச விளையாட்டுப் பயணத்தைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

- கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட இதில் 12 பேர் இடம் பெற்றிருந்தனர்.
- இந்தப் பயணக் குழுவானது ஆல்ப்ஸ் மலைத் தொடர்களில் 250 கிலோமீட்டர்களுக்கு மேலான தொலைவு வரையில் குளிர்கால மலையேற்றப் பயணத்தை மேற்கொண்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★